இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1984 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, சனவரி மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1984, சனவரி மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 60

**1984 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1984, சனவரி மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 42/83

**கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி, கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையிலுள்ள கண்டியில், 1837 ஆம் ஆண்டில் அல்லது அவ்வாண்டிற்கண்மையில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றி, கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் 'சங்கம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்கத்தில் தற்போது உறுப்பினராகவுள்ளவர்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்கம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன், அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிரான வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை திருத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். கண்டி—ஆபத்தில் உதவுவோர் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) அலைந்து திரிதலையும் பிச்சையெடுப்பதையும் ஊக்கங் கெடுத்தல் ;

(ஆ) நேரடியாகச் சென்று பார்ப்பதன்மூலமும் விசாரணை மூலமும் இடர்ப்பாடுற்றமையையும் துணையற்றமையையும் பற்றிய சந்தர்ப்பங்களை நிச்சயித்தலும், நன்கொடையாக அல்லது வேறு வகையாக நிவாரணமளித்தலுக்கு ஏற்பாடுசெய்தலும் ;

(இ) முதியோருக்கான இல்லங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

ஏ 68458 — 2,880 (02/83)

(ஈ) துணையற்றமைக்கும் இல்லாமைக்கும் நிவாரணமளிப்பதற்கு அல்லது அவற்றைத் தடுப்பதற்கு இயன்றனவாகவிருக்கக்கூடிய வேறெவையேனும் வழிவகைகளை எடுத்தல்; அத்துடன்

(உ) மேலேயுள்ள குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணம் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் முகாமை.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பதவிதாங்குநர்களையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவர்களும் அவ்விதிகளுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும்கொண்ட பேரவையொன்றினால், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில், பதவிவகிக்கும் சங்கத்தின் பேரவையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையாக அமைதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை.

6. (1) கூட்டுத்தாபனத்தின் எல்லா அசைவற்ற ஆதனங்களினதும் கட்டுக்காப்பு, கூட்டுத்தாபன விதிகளுக்கமைய, கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபை இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமூகமளித்து வாக்களிக்கும் கூட்டுத்தாபன உறுப்பினரின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும், பேரவையையும், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபையையும் தேர்ந்தெடுப்பதற்காகவும், பதவிதாங்குநர்களினதும்,

போவையினதும், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபையினதும், கூட்டுத் தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பனவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்துக்குக் காலம் விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதே போன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும். *சங்கத்திடமிருந்து செல்மதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

9. ஏதேனும் கொள்வனவு, கொடை, நன்கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் வைத்திருக்கப்படலும் வேண்டும். *கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

10. கூட்டுத்தாபனத்தின் 'இலச்சினையானது, போவையின் மூன்று உறுப்பினர்களின் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து, அவர்கள்மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது. *குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்